விலை சதம் -/25

# காந்தீயம்

**நிர்மாணத் திட்டம்**

நிர்மாண வேலை செய்தால் அரசியல் இலட்சியங்களைப் பெறும் சக்தி நிச்சயமாக வந்தே சேரும்.

—மகாத்மாகாந்தி

UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICALS DIVISION 2005


மலர் 16 | காந்தி நிலையம்-உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 109) 1979 சனவரி—பெப். | இதழ் 4-5

# சீலத்தால் உயர்ந்தவர்

தவத்திரு - குன்றக்குடி அடிகளார்

மனிதனின் அகச் சூழல்களுக்கும் புறச் சூழல்களுக்கும் நிறையத் தொடர்பு உண்டு. அகச் சூழலே புறச் சூழலை உருவாக்குகிறது. ஆனல் தனித்து நின்று அக வலிமை பெற முடியாதவர்கள், பெற்றவர்களின் துணையோடு மற்றவர்களைச் சார்ந்து, அக வலிமையைப் பெறுகிறுர்கள். பாரத நாட்டு மக்கள் விடுதலை இழந்து அடிமைகளாய் வாழ்ந்தனர். அவர்களுடைய பழக்க வழக்கங்கள் கூனிக் குறுகி இருண்ட உலகத்திற்கு உரிமையாகி விட்டது. அஞ்சி அஞ்சி வாழ்ந்தனர், ஆதிப்த்திய பலம் படைத்த ஆங்கிலேயர்களோ இவர்களை வளர்க்காமல் பயனடையவே விரும்பினர். இருண்ட காலக் கட்டத்தில்தான் பாரத சமுதாயத்தில் ஒரு எழு ஞாயிறு தோன்றிற்று. கதிரவன் எனச் சுற்றித் திரிந்தது, ஆனல் கதிரவனுக்குச் சுடும் ஒளி மட்டுமே உண்டு; தண் நிலவு உடையாது. இந்த ஞாயிற்றினிடத்துச் சுடும் கதிரொளியும் இருந்தது. தண் நிலவும் இருந்தது. அவர்தான் அண்ணல் காந்தியடிகள்.

அண்ணல் காந்தியடிகள் ஆங்கிலேயரிடத்திலிருந்து சுதந்திரத்தை வாங்கும் முயற்சியில் ஈடுபட்டதை விட அதிகமாக சுதந்திரத்தைப் பெறுதற்குரிய மக்களாக பாரத நாட்டு மக்களைத் தயார் செய்வதிலேயே ஈடுபட்டார். அவருடைய இலட்சிய முழக்கு சுதந்திரம் பெற்றே தீருவோம் என்பதல்ல; சுதந்திரம் அடைந்தே தீருவோம் என்பதேயாம். உள்ளத்தினுலும் உணர்விஞலும் பழக்க வழக்கத்தினுலும் கூனிக் குறுகிக் கிடந்த நிலைமை ஆங்கிலேயருக்குச் சவாரி செய்யும் பல்லக்குப் போல் லாவகமாக இருந்தது. காந்தியடிகள் இந்தக் கூனையெல்லாம் நிமிர்ப்பித்தார். ஆங்



கிலேயரும் இறங்கிப் போயினர். காந்தியடிகள் அரசியல் அடிமைத்தனத்தை விலக்க முயற்சித்தது போலவே மனிதனின் பொருத்தமற்ற அடிமைக் குணங்களையும் போக்க நினைத்தார்.

அவர் மிகச் சிறந்த பழமைகளைப் பிரதிபலித்தார்; அது போலவே மிகச் சிறந்த புதுமைகளையும் பிரதிபலித்தார். உலக அரசியல் வரலாற்றிலேயே பழமையும் புதுமையும் இரண்டறக் கலந்து ஒன்ருகிய ஒரு அரசியல் தலைவராக காந்தியடிகளே விளங்கினுர். தற்சார்பான ஒழுக்கத்தில் அவருக்கு ஈடு அவரே. அதில் உறுதி குலையாதவர். அவர் ஓங்கி உயர்ந்து நின்ருர். அவரது உள்ளம் உலகத்தைத் தொட்டு அளந்தது. இந்திய நாட்டு வரலாற்றில் அவர் ஒரு மையம். இல்லை, அவரே புதிய அத்தியாயத்தை தொடக்கி வைத்தார். அவருடைய ஒளி சிறந்த புகழ் மிக்க வாழ்க்கையில் முன்னை வேதங்களும் உப நிடதங்களும் சாத்திரங்களும் தோத்திரங்களும் கலந்து விட்டன. அவர் மனித குலத்தின் வேற்றுமைகளை மறுத்தார்; மறந்தார். மனித குல ஒருமைப்பாட்டுக்கு ஓயாது உழைத்தார். ஒளியை உடைய ஒன்றே ஒளியைப் பரப்ப முடியும். அண்ணல் காந்தியடிகள் சிந்தனையாலும், சீலத்தாலும், தண்ணளியாலும், வாக்காலும், வாழ்க்கையாலும் அகத்திலும் புறத்திலும் ஒளியைப் பெற்ருர். அதனல் அவரொளி எங்கும் பரவியது; எழுச்சியைத் தந்தது; ஏற்றத்தைத் தந்தது. ஏந்திய துப்பாக்கியின் முனையிலும், கருத்தில் அகிம்சையும், கையில் தடியும் ஊன்றி நடந்த எழிலுருவமாகக் காந்தியடிகள் காட்சியளித்தார். மனித உலகத்தில் அவருடைய பிரவேசத்திற்குப் பிறகே சமாதான சக வாழ்க்கைக் கொள்கை ஓரளவு வெற்றி பெற்றது.

(3ஆம் பக்கம் பார்க்க)

★ சர்வோதய தின சிறப்பிதழ் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயம்

காந்தி நிலையம்

உருத்திரபுரம். [இலங்கை]

தொலைபேசி: 254

(கிளிநொச்சி)

காந்தி ஆண்டு 109

1979 சனவரி-பெப்பிரவரி


## கருத்துப்பிரசாரம்

காந்தியடிகள் அமரத்துவம் பெற்ற தினத்தை - சனவரி 30ஆம் திகதி - சர்வோதய தினமாகக் கொண்டாடி வருகிறோம். காந்திஜியின் பிறந்த நாள், மறைந்த நாள் ஆகிய நாட்களில் அவர் புகழ் பாடிவிட்டதுடன் நம் கடமை முடிந்து விட்டதென்று நாம் நினைக்கிறோமே தவிர அவரது போதனைகளைக் கடைப்பிடிக்கவோ, பிரசாரம் செய்யவோ முன்வருவதில்லை. அவர் வாழ்ந்து காட்டிய எளிமை, நேர்மை, அகிம்சை, சத்தியம் ஆகியவைகளை நமது வாழ்க்கையில் கைக்கொள்வது பற்றி சிந்திப்பதில்லை.

இன்று அரசியல் கட்சிகளிடம் மக்கள் நம்பிக்கை இழந்து வருகிறார்கள். வெட்கமோ, விநயமோ சிறிதுமின்றி அரசியல் பதவிகளுக்காகவும் தமது சுய நலத்துக்காகவும் அரசியல்வாதிகளும் கட்சிகளும் ஊழல்களுக்கு இரையாகி வருகிறார்கள். மக்கள் விழிப்புற்று இருக்கிறார்கள். ஆனால் மாற்று வழி தெரியாது திகைத்து நிற்கிறார்கள். இந்த நிலையில் காந்திய - சர்வோதய இயக்கம் தான் மக்களுக்கு வழிகாட்ட வேண்டியிருக்கிறது. இயக்கம் வளர இலக்கியங்கள் இன்றியமையாதவை. புரட்சிக்கவி பாரதியும் காந்திஜியும் விநோபாஜியும் ஜயப்பிரகாஷ் நாராயணனும் அரசியல் ஞானிகள் மட்டுமல்ல; இலக்கியக்கர்த்தாக்களும் ஆவர். அவர்கள் வழிவந்துள்ள பல சிந்தனையாளர்களும் இலக்கிய கர்த்தாக்களும் ஏராளமான இலக்கியங்களை சிருஷ்டித்துள்ளார்கள். இலக்கியங்களை சிருஷ்டித்தால் மட்டும் போதாது; அவை மக்களிடையே விநியோகிக்கப்பட்டால்தான் அக்கருத்துக்கள் மக்களிடையே வேரூன்ற முடியும்.

இலக்கியப் பணியுடன் ஆங்காங்கு கருத்தரங்குகளும் பயிற்சி முகாம்களும் நடைபெறுவது அவசியமாகும். இதன் மூலமும் காந்திய-சர்வோதய கருத்துக்களை மக்களிடையே சிறப்பாக இளைஞர்களிடையே பரவச் செய்ய முடியும்.

காந்திய - சர்வோதய ஊழியர்களின் பணி எதிர்நீச்சல் போடுவது போன்று கடினமானது தான் என்பதில் ஐயமில்லை. ஆனால் விநோபாஜி கூறியதைப் போன்று கடினமான வேலையை மேற்கொண்டு செயல்படுத்துவதற்காகவே ஆண்டவன் மனிதனைப் படைத்திருக்கிறான். காந்திய - சர்வோதய கருத்துக்கள் மக்களிடையே பரவி வேரூன்றுதவரையில் இன்றைய இன்னல்களுக்கு பரிகாரம் காண்பது இயலாத காரியம். எனவே காலம் கனிந்துள்ள இச் சமயத்தில் காந்திய - சர்வோதய ஊழியர்கள் தங்கள் கடமையை நிறைவேற்ற முன்வருவார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

## கஸ்தூரிபாய் இல்லம்

### பாலர் பாடசாலை

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் ஆதரவில் பரந்தன் தர்மபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள கஸ்தூரிபாய் இல்லத்தில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. க. சுப்பிரமணியம் பாலர் பாடசாலையைச் சென்ற 12 ஆம் திகதி ஆரம்பித்து வைத்தார்.

இவ் வைபவத்திற்கு யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கத் தலைவர், சட்டத்தரணி எஸ். கனகரத்தினம் அவர்கள் தலைமை வகித்தார்.

திரு. சி. க. வேலாயுதபிள்ளை, திரு. ச. கந்தசாமி, திரு. சூசைநாயகம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

திருமதி. கந்தசாமி - புஷ்பராணி நன்றி கூறினார்.

செல்வி. இ. சிவமலர் பாலர் பாடசாலையின் நிர்வாகியாகக் கடமையாற்றுகிறார்.

## காந்தி சேவா சங்க 29ஆவது ஆண்டுக் கூட்டம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் 29 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் 30-12-78 சனிக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் விபுலானந்த புத்தகசாலையின் மேல்மாடியில் தலைவர் திரு. இ. கந்தையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

பேராசிரியர் கு. நேசையா அவர்கள் ''பத்து அம்ச நிர்மாணத்திட்டம்'' பற்றி உரை நிகழ்த்தினார்.

சென்ற ஆண்டுக் கூட்ட அறிக்கையும் செயலாளரின் ஆண்டு அறிக்கையும் பொருளாளரின் வரவு - செலவு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன.

அடுத்ததாக சங்க அமைப்பு-விதிகளுக்குரிய திருத்தங்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

கடந்தகாலப் பணிகள் குறித்து அங்கத்தவர்களிடையே கருத்துப் பரிமாறலை அடுத்து புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப் பெற்றனர்.

**தலைவர்:** திரு. இ. கந்தையா

**உப தலைவர்கள்:**

பேராசிரியர் கு. நேசையா

பண்டிதர் செ. துரைசிங்கம்

**பொதுச் செயலாளர்:**

திரு. கா. விஸ்வலிங்கம்

**உதவிச் செயலாளர்கள்:**

திரு. சோ. க. வேலாயுதர்

திரு. செ. குகதாசன்

**பொருளாளர்:**

திரு. அ. பாலசுப்பிரமணியம்

**நிர்வாக சபை உறுப்பினர்:**

திரு. சி. க. வேலாயுதபிள்ளை

பண்டிதர் க. யோ. ஆசிநாதன்

திரு. பொ. செல்வரத்தினம்

திரு. ச. சரவணமுத்து

திருமதி. கந்தசாமி-புஷ்பராணி

செல்வி. இ. சிவமலர்

திரு. த. நல்லதம்பி

திரு. ச. அ. டேவிட்

திரு. த. விநாயகம்

திரு. இ. ஸ்ரீபதி

திரு. க. தேவராஜா

திரு. சோ. க. தம்பிப்பிள்ளை

கணக்குப்பரிசோதகர்:

திரு. எஸ். என். சுந்தரப்

✶ சர்வோதய நற் சமுதாயத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீலத்தால் உயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்னதான் ஒளி சிறந்ததாயினும், திரிந்த இருளும் போட்டி போட்டுக் கொண்டு கவிகிறது. ஒளியின் கவர்ச்சியில் இருள் ஒதுங்கிக் கிடக்கிறதே தவிர இருள் மாய்ந்து விடுவதில்லை. ஒளி சேர்ந்தாலோ அணைந்தாலோ உடன் திரிந்த இருள் கவ்வி விடுகிறது. அது போலவே காந்தியடிகளின் புகலொளியில் பாரதம் வளர்ந்தாலும் திரிந்த இருள், அவருயிரைக் கொள்ளை கொண்டது. அவர் மறைவுக்குப் பிறகு, உலகம் அந்த ஒளியின் வழியில் நடக்காமல் வேறு வேறு வழியில் நடக்கிறதோ என்ற கேள்விக்குறி தோன்றியுள்ளது. மீண்டும் மனித குல வேறுபாட்டுணர்ச்சிகள் தலை தூக்கியுள்ளன. அந்த வேறுபாட்டுணர்ச்சிகள் கொலையளவுக்கும் தாண்டிவிட்டிருக்கின்றன. உலகரங்கில் போர்ப்பதற்றம் ஏற்பட்டுள்ளது. இது ஒரு பெரிய குறை. மனிதாபிமானம் உள்ளவர்களும், நினைக்கும் திறம்படைத்த நெஞ்சுள்ளவர்களும், அன்பு கூர்ந்து எண்ணிப் பாருங்கள்! காந்தியத்தின் சாயல் நமது தனிப்பட்ட வாழ்க்கையில் மனித சமுதாயத்தின் வாழ்க்கையில் எவ்வுளவு தூரம் படர்ந்திருக்கிறது, நிலை பெற்றிருக்கிறது என்பதை எண்ணிப் பாருங்கள். நமது தலைமுறையில் தோன்றிய ஒளி படைத்த தத்துவத்தை உயர் நெறியை நாமே இழக்கலாமா? கல்லறையில் கட்டடம் கட்டிக் கவினுறு தத்துவத்தை இழந்தால் என்ன பயன்? விழாவொலியில் இழப்பொலி கலக்கலாமா? அன்பு கூர்ந்து எண்ணுங்கள். அண்ணல் காந்தியடிகளின் அரிய தத்துவங்களைச் செயற்படுத்த உறுதி கொள்வோம்! வேறுபாடற்ற பகைமையற்ற இன்ப அன்பில் தழுவிய ஒருஉலகத்தை சகலருக்கும் காணிக்கையாக்குவோம்! இந்த மண்ணகத்தை விண்ணகமாக்குவோம்! இதுவே காந்தியடிகளுக்கு நீங்காத நினைவு! நிலையான வழிபாடு!

# புதிய நிர்வாகிகள்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் ஆதரவில் இயங்கிவரும் கிளிநொச்சி - உருத்திரபுரம், காந்தி நிலையம் தர்மபுரம், கஸ்தூரிபாய் இல்லம் ஆகியவற்றின் புதிய நிர்வாகக் குழுவினர் சமீபத்தில் தெரிவு செய்யப் பெற்றனர்.

தலைவர்:
டாக்டர். ஆ. கனகரத்தினம்

உபதலைவர்:
முதலியார். செ. சின்னத்தம்பி

செயலாளர்:
திரு. சோ. க. தம்பிப்பிள்ளை

பொருளாளர்;
திரு. எஸ். சரவணமுத்து

முகாமையாளர்;
திரு. சி. க. வேலாயுதபிள்ளை

நிர்வாகசபை உறுப்பினர்:
திரு. கே. ஸி. தங்கராசா
திரு. கா. விஸ்வலிங்கம்
செல்வி: இ. சிவமலர்

# உலகப் பெண்கள் மாநாடு

வட இந்தியாவில் வார்தாவுக்குச் சமீபமாக வினோபாஜி தங்கியிருக்கும் பவனர் ஆசிரமத்தில் 1979 அக்டோபர் 2 ஆம் தேதி காந்தி ஜயந்தியன்று அகில உலகப் பெண்கள் மாநாடு நடைபெறும். இம்மாநாட்டில் சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்டுவது, குடும்பக் கட்டுப்பாடு, பால் உணர்ச்சியைத் தூண்டும் சினிமா மற்றும் விளம்பரங்களுக்கெதிரான நடவடிக்கை, ஹரிஜனங்கள் கொடுமைகளுக்குள்ளாவது முதலியவை பற்றி ஆராயப்படும்.

# ஏற்றத்தாழ்வு எப்படி வந்தது?

மனிதனுடைய நாகரிக வளர்ச்சி சமுதாய வேற்றுமைகளை வளர்ப்பது. நாகரீகம் வளர்வதால் ஏற்றத்தாழ்வு வளர்கிறது. இரண்டும் இணையாகவே செல்கிறது. யார் யார் நாகரிகத்தைக் கொண்டு வந்தார்களோ அவர்கள் தான் ஏற்றத்தாழ்வையும் கொண்டு வந்தார்கள்.

படிக்காதவர்கள் செய்யும் வேலையைப் படித்தவர்களும் படித்தவர்கள் செய்யும் வேலையை படிக்காதவர்களும் செய்யமுடிவதில்லை. நான் 40 வருடகாலமாக மகாத்மாவின் கூற்றுப்படி முயற்சித்து வருகிறேன். ஆனால் பலன் அளிக்கவில்லை. ஏற்றத்தாழ்வு என்பது உலகில் தொட்ட இடமெல்லாம் இருந்து வருகிறது.

உயர்நீதிமன்ற நீதிபதியின் வீட்டில் அவருடைய பசு இரவு ஒரு மணிக்கு கன்று போட்டால் என்ன செய்வார் — அவரால் மருத்துவம் செய்ய இயலாது. அதுபோல நாட்டைக் காத்த தியாகிக்கு வீட்டில் சாம்பார் வைக்கத் தெரியாது. இப்படி உயர்ந்த அறிவாளிகளுக்கும் அறிவற்றவர்களுக்கும்கூட சிறு சிறு விஷயங்கள் தெரியாமலிருக்கும். உலகமே அப்படித்தான்.

உயர்ந்த கொள்கைகளைப் பேசுபவர்கள் வாழ்வதாக அறியவில்லை. பேசத் தெரிந்தவர்களுக்கு வாழ்வும் வாழத் தெரிந்தவர்களுக்குப் பேசவும் தெரிவதில்லை. இவையெல்லாம் இருட்டறையில் கறுப்புப் பூனை இருப்பது போன்று உள்ளது.

சமுதாயத்தில் ஏழை, எளியமக்களின் சோஷலிஸம் என்றுவது வந்து விடும். ஆனால் பணக்காரர்கள் சோஷலிஸம் என்றுமே வராது.

—வெ. இராமச்சந்திரன்
தலைவர்
தமிழ்நாடு சர்வோதய சங்கம்

**நிர்மாணம் செய நித்தமும் உழைப்போம் ★**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருமபுரத்தில் அன்னை கஸ்தூரிபாய்

கிளிநொச்சித் தொகுதியில், தர்மபுரம் எனும் இடத்திலுள்ள 'அன்னை கஸ்தூரிபாய் இல்லம்' ஆதரவற்ற பெண்களுக்காக அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினுல் அமைக்கப்பட்டுள்ளது. இது, ஏற்கலவே இச் சங்கத்தினுல் உருத்திரபுரத்தில் நிறுவப்பட்டுள்ளதும் அரசாங்கத்தினுல் தர்மத் தாபனமாக அங்கீகரிக்கப்பட்டதுமான 'அநாதை இல்லமும் இளைஞர் பயிற்சி நிலையமும்' என்ற அமைப்பின் ஒரு பிரிவாகும். உருத்திரபுர நிலையம் ஆதரவற்ற ஆண் பிள்ளைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இரண்டு நிலையங்களும் ஒரே நிருவாகக் குழுவினுல் நடாத்தப்படுகின்றன. இந்த இரு நிலையங்களிலும் இலங்கையின் எப்பகுதியிலாயினுமுள்ள ஆதரவற்றவர்களும் அநாதைகளுமாயுள்ள ஆண்களும் பெண்களும் சேர்க்கப்படுகின்றனர்.

அன்னை கஸ்தூரிபாய் இல்லத்துக்கென அரசாங்கம் இருபத்தைந்து ஏக்கர் நிலம் ஒதுக்கியுள்ளது. இதில் மூன்று ஏக்கர் நிலம் மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டு அதில் ஒரு தற்காலிகக் கட்டடத்தில் கஸ்தூரிபாய் இல்லம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இல்லத்தில் இப்பொழுது பன்னிரண்டு ஆதரவற்ற பெண்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களை மேற்பார்வை செய்யும் பொறுப்பை தொண்டு மனப்பான்மையுள்ள அம்மையார் ஒருவர் ஏற்றுள்ளார்.

இந்த இல்லத்தில் சேர்வதற்கு மேலும் பலர் விண்ணப்பித்த பொழுதிலும் இடவசதியும் அவர்கள் இல்லத்திலேயேயிருந்து செய்யக்கூடிய நிலையான தொழில் வசதிகளும் ஏற்பாடு செய்யப்படாமையினுல் அவர்கள் யாவரையும் சேர்த்துக்கொள்ள முடியவில்லை.

இப்பொழுது இந்த இல்லத்திலுள்ள ஆதரவற்ற பெண்களின் எண்ணிக்கையிலும் பார்க்கக் கூடிய தொகையானவர்களுக்கு இடமளிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த காந்தி சேவா சங்கம் 50 — 60 வரையான ஆதரவற்ற பெண்களுக்காயினும் போதிய இடவசதிகள் செய்யவும் அவர்கள் ஈடுபடக் கூடிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தவும் உதவக்கூடிய ஒரு திட்டத்தை வகுத்துள்ளது. தன்னிறைவு கொண்ட ஓர் இல்லத்தை உருவாக்குவதே எமது நோக்கமாகும். இல்லத்தில் வசிக்கும் பெண்கள் யாவரும் தாமே தம்மைப் பராபரித்துக் கொள்வதற்கு மாத்திரமன்றி தம் வருங் காலத்திற்கு உதவக் கூடியவாறுன சேமிப்பைச் செய்து கொள்ளவும் உதவக்கூடிய தொழில் வாய்ப்புக்களை இல்லம் ஏற்பாடு செய்யக் கருதியுள்ளது. இந்த ஏற்பாட்டின் மூலம், இவ் இல்லத்தில் வசிக்கும் ஒவ்வொருவரும் தன்மானத்துடனும் தன்னம்பிக்கையுடனும் வாழ்கிறேம் என்ற உணர்ச்சியைப் பெறக் காந்தி சேவா சங்கம் உதவும் என நாம் நம்புகிறேம்.

எமது திட்டத்திற்கு ஏறத்தாழ ஆறு இலட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:-

| | | ரூபா |
|---|---|---|
| 1. | 50 — 60 பெண்கள் வசிப்பதற்கு வேண்டிய வசதிகளைக் கொண்ட 10 அறைகள், வழிபாட்டு அறை, ஒரு மண்டபம், வாசிகசாலை, சமையலறை, சாப்பாட்டறை ஆகியனவற்றிற்கு ... | 150,000 |
| 2. | முகாமையாளர் வசிப்பதற்கும் அவருடைய அலுவலகத்திற்கும் ... | 35,000 |
| 3. | மிகுதியாகவுள்ள 22 ஏக்கர் நிலத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு | 25,000 |
| 4. | இல்லத்தில் வசிப்பவர்களுக்கு வேண்டிய தளபாடங்களுக்கு ... | 25,000 |
| 5. | மேலதிக கிணறு ... | 25,000 |
| 6. | உழவு இயந்திரம் (இரு சில்லுகள்) பெட்டியுடன் ... | 25,000 |
| 7. | நீர் இறைக்கும் இயந்திரம் ... | 25,000 |
| 8. | விவசாய உபகரணங்கள் ... | 15,000 |
| 9. | தையல் இயந்திரங்கள் ... | 10,000 |
| 10. | பழமரங்கள் முதலியவை நடுவதற்கு (மா, பலா, வாழை, பப்பா, கொடி முந்திரி, தென்னை, மரக்கறி, சணல் முதலியன) ... | 25,000 |
| 11. | பெண்களுக்குப் பொருத்தமான சிறு கைத்தொழில்களுக்கு; | |
| | (அ) மரவள்ளியிலிருந்து பீசின் ... | 25,000 |
| | (ஆ) ஆமணக்கு விதையிலிருந்து எண்ணெய் ... | 35,000 |
| | (இ) பாற்பண்ணை ... | 25,000 |
| | (ஈ) பப்படம் செய்தல் ... | 15,000 |
| | (உ) கைத்தறிகள் ... | 15,000 |
| 12. | தொழிற்சாலை, பண்டசாலை கட்டிடத்திற்காக ... | 100,000 |

இத் திட்டம் தன்னலமற்ற சேவையாற்றுவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தை அளிக்கிறது. இந்த உயர் நோக்கத்தை ஈட்டுவதற்கு வேண்டிய உதவியை ஆதரவற்றவர்க்குக் கைகொடுத்து உதவ வேண்டுமென்ற ஆர்வமுள்ள ஈகையாளர்கள் யாவரும் முன்வந்து செய்வர் என்ற நம்பிக்கை எமக்கு உறுதியாக உண்டு. மேன்மை மிக்க இப்பணிக்கு தாராளமான உதவி செய்யுமாறு தங்களை அன்புடன் வேண்டுகிறேம்.

நன்கொடைகளைக் காசோலை மூலம் ''கிளிநொச்சி அநாதை இல்லமும் பயிற்சி நிலையமும்'' என எழுதிக் குறுக்குக் கோடிட்டு ''பெறுபவரின் கணக்குக்கு மாத்திரம்'' எனக் குறிப்பிட்டு, கௌரவ பொதுச் செயலாளர், காந்தி சேவா சங்கம், 74, பசல்ஸ் ஒழுங்கை, கொழும்பு-6 என்ற முகவரிக்கு அனுப்பி உதவுமாறு பணிவுடன் வேண்டுகிறேம்.

கா. விசுவலிங்கம்,
பொதுச் செயலாளர்.

## வினேபாவின் நகைச்சுவை

### கோபமும் - கற்கண்டும்

ஊழியர்கள் கோபத்தை வெற்றி கொள்வதற்கான உபாயம் ஒன்றை வினேபாஜி கூறினுர். கற்கண்டு மூலம் கோபத்தை வெற்றிகொண்ட தனது அனுபவத்தைக் கூறினுர். ''நான் ஆரம்பத்தில் மிகவும் கோபக்காரனுக இருந்தேன். எப்போதும் ஏதாவது படித்துக் கொண்டே இருப்பது என் வழக்கம். ஆகையால் யாராவது வீண் பேச்சு பேசுவதை என்னுல் சகிக்க முடியாது. ஒருசமயம் ஒரு அன்பர் என்னிடம் பேச உட்கார்ந்தார். பேசிக் கொண்டே இருந்தார். எனக்கு மிகவும் கோபம் வந்து விட்டது. உடனே பக்கத்திலிருந்த கற்கண்டில் இரண்டு துண்டுகளை எடுத்து ஒன்றை அவர் வாயிலும் மற்றென்றை என் வாயிலும் போட்டேன். இருவரும் வாயடைத்து விட்டோம். வாய் இனிப்பானதால் கோபமும் மறைந்து விட்டது. இதே முறையை ஊழியர்களும் கையாளலாம்.

இப்பத்திரிகை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் விவேகானந்தர் மேடு, கொழும்பு - 13 சங்கர் சன்ஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
இலங்கையில் புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org